கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **26.08.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "பாரம்பரிய நெல் வகைகளில் மதிப்புக் கூட்டுதல் குறித்த பயிற்சி"

வேளாண் காலநிலை ஆய்வு மையம், பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் சார்பில் பன்னாட்டு நிறுவனமான கிரான்ட் செலஞ்சு கனடா நாட்டின் நிதியுதவியுடன் "பாரம்பரிய நெல் வகைகளில் மதிப்புக் கூட்டுதல்" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி 25.08.2025 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் வேளாண் காலநிலையியல் உதவி பேராசிரியர் முனைவர் செ.கோகிலவாணி அவர்கள் வரவேற்று, பாரம்பரிய நெல் சாகுபடியில் காலநிலை மாற்றத்திற்கான ஏற்பாட்டு முறைகளின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

பயிற்சியின் பிரதான நோக்கம், பாரம்பரிய நெல் வகைகளின் சாகுபடி, உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றின் மதிப்புக் கூட்டிய உணவுப் பொருட்கள் மூலம் சத்துணவு மேம்பாட்டுக்கும், வாழ்க்கை முறை நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்திக்கும் பங்களிப்புச் செய்வதாகும். இந்நிகழ்ச்சியை, பயிர் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு), முனைவர் ந.செந்தில் அவர்கள் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மைய பேராசிரியரும் தலைவருமான முனைவர் நா. க. சத்தியமூர்த்தி அவர்கள், காலநிலைத் தகவல்களின் பயன்பாடு மற்றும் சாகுபடி முறைகள் குறித்து சிறப்பு விரிவுரையாற்றினார்.

அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு.கார்த்திகேயன் அவர்கள், பாரம்பரிய நெல் அடிப்படையிலான உணவுப் பொருட்களை உருவாக்க சிறு தொழில்களில் உணவு பாதுகாப்பு மேலாண்மை முறைகளின் அவசியத்தை எடுத்துரைத்தார். இராமசாமி சின்னம்மாள் அறக்கட்டளை செயலாளர் முனைவர் சரஸ்வதி ஈஸ்வரன் அவர்கள், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதில் தன்னார்வ அமைப்புகளின் பங்களிப்பும், தொழில்முனைவு மேம்பாட்டிலும் அவற்றின் பங்கும் குறித்து கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மை துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ப. பாலாஜி அவர்கள், "பாரம்பரிய நெல் வகைகளின் மதிப்புக் கூட்டிய பொருட்களின் சந்தைப்படுத்தல்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார். திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 20 விவசாயிகள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் சார்பில் ஐந்து சுயஉதவி குழு பெண்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பங்கேற்பாளர்கள், பாரம்பரிய பயிர் சாகுபடி முறைகள், மதிப்புக் கூட்டுதல், உணவு பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் உத்திகள் குறித்த நடைமுறை தகவல் பெற்றனர். முனைவர் ப. கீதா அவர்கள் நன்றி உரையாற்றி, மதிப்புக் கூட்டுதல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் தன்னுடைய அனுபவங்களையும் பகிர்ந்து இந்நிகழ்ச்சி நிறைவுற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**